


# கொவிட் - 19 காலப்பகுதியில் இலங்கை அரசு பற்றியும் எமது தனிமனித சுதந்திரங்கள் பற்றியும் பேசுவோம்

LAW & SOCIETY TRUST

# ஜனநாயகக் கலந்துரையாடல், முனைப்பான செவிமடுத்தல் மற்றும் உள்ளடங்கலான பிரசைகள் பங்கேற்பு: பெருந்தொற்றின்போதும் சமூக நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்கல்

இலங்கை முகங்கொடுக்கும் பெருந்தொற்றின்போதும் சமூக பொருளாதார நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்குவதும் ஜனநாயக நிறுவனங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் அரச பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துவதும் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஈடுபாடுமிக்க பிரசைகள் என்ற ரீதியில், நெருக்கடிக்கான அரசாங்கத்தின் பதிற்செயற்பாடுகள் அரசியலமைப்பியலின் கோட்பாடுகளுக்கு இயைபுறுகின்றன என்பதையும் அரசாங்கம் அதிலிருந்து விலகுமிடத்து அவை கட்டுப்படுத்தப்படுவதையும் தவறான தகவல்களும் வெறுப்பினைப் பரப்பலும் தடுக்கப்பட்டு மாற்றத்தை உருவாக்குவோர் மற்றும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்கள் ஆகியோரின் திடமான ஈடுபாட்டின் மூலம் சமூக ஒற்றுமை வலுப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதையும் நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு, சுகாதார மற்றும் பொருளாதாரச் சவால்களுக்கான அரசாங்கத்தின் துரித பதிற்செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற; கொள்கை விடயங்கள் மீதான பகிரங்கக் கலந்துரையாடலொன்றை மேம்படுத்துகின்ற, அடிப்படை உரிமை மீறல்களை ஆவணப்படுத்துகின்ற; ஜனநாயக விழுமியங்களிலும் அரசியலமைப்புக் கோட்பாடுகளிலும் அடிப்படை உரிமைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உருவாகிவரும் விடயங்கள் பற்றிப் பிரசைகளுக்கு உரிய நேரத்தில் உண்மைகளின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகின்ற முறைசாராக் "குடிமைக் கண்காணிப்பினைக்" கருத்திட்டம் உருவாக்கியுள்ளது. ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுப்படுத்துவதற்காக ஆதரித்துவாதாடல் பிரசாரங்களை மேற்கொள்வதையும் அத்துடன் பெருந்தொற்றுக்குப் பின்னரான சூழமைவில் பிரசைகள் தங்களின் தேவைகள், பதகளிப்புக்கள் மற்றும் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதை இயலச் செய்யும் ஒரு தேவைகள் மதிப்பீட்டினை நடத்துவதையும் கருத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

கருத்திட்டத்துக்கான ஒரு பங்களிப்பாக இந்த அறிக்கை மைக்கல் மெண்டிசினால் எழுதப்பட்டுள்ளது. Dr. சகுந்தலா கதிர்காமர், நிறைவேற்றுப் பணிப்பாளர், இந்த அறிக்கையினை மீளாய்வு செய்துள்ளார். இந்த

அறிக்கையின் கருத்தியலாக்கத்திற்கு உதவியமைக்காக Ms. ஏர்மிசா டேகலுக்கு (சட்டத்தரணி) விசேட நன்றிகள் உரித்தாகட்டும். இக்கருத்திட்டத்தில் அவர்களின் ஈடுபாட்டினை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை மெச்சுகின்றது. இந்தக் கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் எல்எஸ்டியின் சபையின் அல்லது முகாமைத்துவத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

**முகப்பு வடிவம்: சங்கீத் மதுரவல**

# கொவிட் - 19 காலப்பகுதியில் இலங்கை அரசு பற்றியும் எமது தனிமனித சுதந்திரங்கள் பற்றியும் பேசுவோம்

## அறிமுகம்

2020 ஆம் ஆண்டில் உலகை ஆட்கொள்ள ஆரம்பித்த கொவிட் - 19 பெருந்தொற்று அனைத்து இடங்களிலும் உள்ள சமூகங்களைப் பாதித்து வருகின்றது. பெருந்தொற்றின் அழுத்தத்தின் காரணமாக முன்பிருந்தே நிலவிவந்த சமத்துவமின்மைகள் வலுப்பெற்றுள்ளன. பெருந்தொற்றுக்கான உறுதியான பதிற்செயற்பாட்டுக்கான தேவையினைப் பலத்தினைப் பிரயோகிப்பதுடன் சேர்த்து அல்லது ஆட்சியாதிக்க நடவடிக்கைகளுடன் சேர்த்து அரசாங்கம் குழப்பிக்கொண்டுள்ளது. பொதுமக்களுடனும் அவர்களின் சட்டவாக்கப் பிரதிநிதிகளுடனும் சொற்பமான கலந்தாலோசிப்புக்களே நடத்தப்பட்டுள்ளன அல்லது சொற்பமான விளக்கங்களே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பெருந்தொற்றின் போது தனிமனித சுதந்திரம் அரசினால் மீறப்படுவது தொடர்பாக நாம் அவதானமாக இருக்கவேண்டும் என்பதுடன் அவற்றிற்கு நாம் சவால் விடுக்கவும் வேண்டும். 'தமது வழியில் செல்வதற்கான' சுதந்திரம் ஒருவருக்கு மறுக்கப்படுகையில் அவரின் தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதென இலங்கை உயர் நீதிமன்றம் பொதுவாகக் கருதுகின்றது. தனிப்பட்ட பிரசைகளின் தனிமனித சுதந்திரம் அவர்களிடம் இருந்து பறிக்கப்படுகையில் பயன்படுத்துவதற்கெனச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள சகல செயன்முறைகளையும் அரசின் அனைத்து அங்கங்களும் இறுக்கமாகப் பின்பற்றவேண்டும் என்றே அரசியலமைப்புத் தேவைப்படுத்துகின்றது.

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக்களைத் தாண்டி, தன்னிச்சையான கைதுகளும் தடுத்துவைப்புக்களும் விளக்கமறியலில் உள்ளவர்கள் மோசமாக நடத்தப்படுதலும் விளக்கமறியலில் இருக்கையில் மரணமடைதலும் கடந்த காலங்களில் அதிகரித்துள்ளன. ஒரு போக்காகக் கருதப்படும் அளவிற்கு இது வலுவாக நிலைபெற்றுள்ளது. இருப்பினும், பெருந்தொற்றுத் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து தன்னிச்சையான கைதுகளும் தடுத்துவைப்புக்களும் விளக்கமறியலில் மோசமாக நடத்தப்படுவதும் விளக்கமறியல் மரணங்களும்

அதிகரித்திருப்பதை மட்டுமன்றி பெருந்தொற்றுக்கான அரசாங்கத்தின் பதிற்செயற்பாட்டின் அங்கமாக இவை மாறியிருப்பதையும் இலங்கையர்கள் கண்டுள்ளனர்.

நெருக்கடிமிக்க காலப்பகுதியில், சட்ட அமலாக்கல் நிறுவனங்களும் தேசிய பாதுகாப்பும் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் சேர்த்து இறுக்கமடைகின்றன. பெருந்தொற்று நெருக்கடியும் இதற்கு விதிவிலக்கல்ல. அரசு 'கடுமையான' நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டு 'உறுதியான', 'வினைத்திறன்மிக்க' மற்றும் 'ஒழுக்கம்மிக்க' பொதுச்சுகாதார பதிற்செயற்பாடுகளுக்கான தேவை என இக்கடுமையான நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்படுகின்றன. இருப்பினும், இறுக்கமடைந்து வரும் நிறுவனங்களுடன் இலங்கையர்களுக்கு இருப்பதோ குமுறல் மிக்க உறவேயாகும். குறிப்பாக, இரண்டு கிளர்ச்சிகளின் போதும் பல தசாப்தங்கள் நீடித்த ஆயுத மோதலின் போதும் இவ்வாறான உறவே நிலவியது. மிக அண்மைக் காலத்தில், 2019 ஆம் ஆண்டில், பெருந்தொற்றுக்கு ஒரு வருடமே இருந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்ககுதல்களைத் தொடர்ந்து நாடு முழுவதும் முஸ்லிம் இளைஞர்கள் கொத்துக் கொத்தாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் அடைக்கப்பட்டனர். இதே வருடம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். சமூகத்திலும் அரசாங்கத்திலும் இராணுவத்தின் அந்தஸ்தினையும் வகிபாத்திரத்தினையும் விசாலமாக்கிய பல தொடர் நடவடிக்கைகளை அவர் எடுத்தார். சில மாற்றங்கள் ஏற்கனவே இடம்பெற்று வந்ததுடன் ஜனாதிபதித் தேர்தல் நிறைவுற்றுச் சில மாதங்களே ஆன நிலையில் பெருந்தொற்றுத் தாக்கிய போது இவை மேலும் வலுப்படுத்தப்பட்டன.

பழைய போக்குகள் தொடர்ந்தாலும், பெருந்தொற்றுக்கென விசேடமாக ஒரு பதிற்செயற்பாட்டினை வடிவமைப்பதற்குப் புதியதும் அதிவிசேடமானதுமான நடவடிக்கைகள் தேவை எனக் கருதப்பட்டன. சந்தேகமின்றி இதே போன்ற நடவடிக்கைகள் உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இலங்கையில் அவர்கள் ஓர் அசாதாரண அரசியலமைப்புப் பிரச்சினையினை உருவாக்கியுள்ளனர். கொவிட் - 19 பெருந்தொற்றுக்காளானவர் முதன்முதலில் கண்டுபிடிக்கப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பாராளுமன்றம் இல்லாமல் காபந்து அரசாங்கமாக இருந்த சிறுபான்மை அரசாங்கத்தின் கீழ் விக்டோரியா யுகத்துத்

“தனிமைப்படுத்தல் கட்டளைச்சட்டத்தில்” பெருமளவு சார்ந்த நிலையில் இலங்கை பெருந்தொற்றினை எதிர்கொண்டது. இந்தச் சூழமைவில், பாதுகாப்புப் படையினருக்கு ஏற்கவேண்டிய ஏராளமான பொறுப்புக்கள் காணப்பட்டன. கொவிடுக்கு எதிரான தேசிய பொறிமுறையின் தலைவராக இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டார்;[1] இராணுவம் தனிமைப்படுத்தல் முகாம்களை நடத்தியது, ஊரடங்கிணைக் கண்காணித்தது, அவசரகால உணவுப் பொதிகளை விநியோகித்தது. இவற்றுக்கு அப்பால் பொது இடங்களில் கிருமிநீக்கம் கூடச் செய்தது. சில வாரங்களினுள், முழு நாடும் முடக்கப்பட்டது. கொவிட் தொற்றாளர்களும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணியவர்களும் அரசால் நடத்தப்பட்ட தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். தேசிய எல்லைகள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு பயணங்களும் போக்குவரத்தும் உண்ணிப்பாகக் கண்காணிக்கப்பட்டன.

## கொவிட் அமலாக்கலுடன் தொடர்புடைய கைதுகள்

2020 மார்ச் நடுப்பகுதியில் நாட்டினுள் கொவிட் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட செய்தி வெளியானதும் அரசாங்கத் துறைக்குப் பொது மற்றும் வங்கி விடுமுறைகள் முதற்கட்ட பதில் நடவடிக்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இதனைப் பின்பற்றுவதில் தமது தற்றுணிபினைப் பயன்படுத்துமாறு தனியார் துறையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனவே, “வீட்டில் இருந்து பணியாற்றல்” என முதல் வாரம் கழிந்தது. வார இறுதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் எனக் கூறப்பட்டு நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்குக்கு இயைபுறாதவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் எனப் பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்டனர்.[2] 2020 மார்ச் முடிவின்போது, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதில் இருந்து 6850 பேர் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையிட்டது.[3] அதேவேளை, “ஊரடங்கினை மீறுபவர்களின் எண்ணிக்கையும் ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களைத்தவறாகப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த காரணத்தினால் பொலிசாருக்கு உதவுவதற்காக அரசாங்கம் ஆயுதப் படையினரை நியமித்த” காரணத்தினால் ஊரடங்கு அமலாக்கத்தில் இராணுவம் சம்பந்தப்பட்டது. ஏப்ரில் மாத நடுப்பகுதியளவில் கைதுகளின் எண்ணிக்கை 34500 ஆக அதிகரித்திருந்தது.[4] மேலும், ஊரடங்கை மீறியவர்களுக்கும் தனிமைப்படுத்தல் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏனைய சுகாதார வழிகாட்டல்களை மீறுபவர்களுக்கும் ஆறு மாத கால சிறைத்

தண்டனை வழங்கப்படவேண்டும் எனக் கோரும் ஒரு கொள்கையினை இலங்கைப் பொலிசார் அப்போது கைக்கொண்டனர்.[5]

ஊரடங்கை மீறுபவர்களைக் கைதுசெய்யும் கொள்கை ஆரம்பித்த நேரத்தில், கொவிட் 19 தொற்று சிறைக்கைதிகளின் மத்தியில் கண்டறியப்பட்ட அச்சத்தினால் அநுராதபுரச் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் இரண்டு சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர். நெரிசல்மிக்க சிறைச்சாலைகளில் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலைமைகளின் காரணமாகச் சிறைக்கைதிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்ற பதற்றம் சிறைச்சாலைகளினுள் உருவாகியது. பெருந்தொற்றின் காரணமாகக் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற முன்மொழிவினைச் சிவில் சமூக ஆதரித்துவாதாடுனர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தனர்.[6] ஏப்ரில் மாத ஆரம்பத்தில் “ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மொத்தமாக 2961 கைதிகள் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்."[7]

**அரசாங்கப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பணியாள் உறுப்பினர் ஒருவரின் வாக்குமூலம் (ஆண், வயது 38, மட்டக்களப்பு)**

“நடமாட்டச் சுதந்திரம் என்பது பாரிய ஒரு சவாலாக இருக்கின்றது. ஒரு வருடத்திற்கும் மேலாக, எம்மால் வெளியே செல்ல முடியவில்லை. இது அனைவருக்கும் பொதுவான ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. கொவிட் பெருந்தொற்றின் தன்மையின் காரணமாக தொற்றுத்தடைகாப்புச் (குவரண்டைன்) சட்டத்தின் கீழேயே விடயங்களை முகாமைத்துவம் செய்யவேண்டியிருக்கின்றது. ஆனால் தமது விருப்பத்தின்படி தமக்கு வேண்டியபோது அவர்களால் சட்டத்தினை வளைக்க முடியாது என்பதல்ல இதன் அர்த்தம். ஒவ்வொருவருக்கும் இந்தப் பெருந்தொற்று ஒரு கடினமான காலத்தினை உருவாக்கியுள்ளது என்பதே இதன் மிகப் பெரிய யதார்த்தமாகும். எனவே, இந்தச் சட்டங்களைப் பின்பற்றுவதற்கு அப்பால் ஏனைய முக்கியமான அம்சங்களையும் நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது. வாழ்வாதார இழப்பு, உறுதியான நிதிப் பின்புல இழப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமை போன்றவற்றால் பொதுமக்களின் வாழ்வில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன. எனவே, இச்சூழ்நிலைகளின் கீழ் மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் கருத்தில்கொள்வதும் மிக முக்கியமானதாகும்.”

“உள்ளூர்ப் பிரதேசங்களில் கூட முழுமுடக்கத்தினைப் பொருட்படுத்தாது மக்கள் அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை காரணமாகவும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அதிகமான நேரங்கள் அலைந்து திரிகின்றனர். தொற்றுத்தடைகாப்புச் சட்டங்களைப் பொருட்படுத்தாது சுற்றித் திரிந்த காரணத்தினால் ஏறாவூர் பிரதேசத்தில் சில முஸ்லிம்களைப் பகிரங்கமாக மண்டியிடச் செய்ததில் இராணுவம் சம்பந்தப்பட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றிருக்கின்றது. ஏறாவூர் பிரதேசத்தில் பயணத் தடையினை மீறிச் சென்றவர்களைக் கைகளை உயர்த்தியவாறு முழந்தாளிடச் செய்யுமாறு இராணுவத்தினர் பலவந்தப்படுத்தியதைக் காட்டும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பரவலாகப் பரப்பப்பட்டன. தொற்றுத்தடைகாப்புச் சட்டத்தின் கீழ் செய்யப்படுகின்றன என நாம் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளில் இவை சிலவாகும். பரந்த வகையில் நோக்குகையில் விடயங்கள் மிகவும் சிக்கல்மிக்கவையாகவும் கடினமானவையாகவும் காணப்படுகின்றன. மேலும், இவ்வகையான செயற்பாடுகள் ஏனைய பாதகமான விளைவுகளை, குறிப்பாக, சனத்தொகையானது மிகவும் பல்வகைமையுடையதாக இருக்கும் கிழக்கு மாகாணத்தில் உருவாக்கலாம். இந்தத் துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுத்தவர்கள் முஸ்லிம் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களே.”

எவ்வாறாயினும், கைதுகள் தொடர்ந்தபோதும் கூட, விதிக்கப்பட்ட ஊரடங்கின் சட்டரீதியான தன்மை தொடர்பாகவும் அந்த ஊரடங்கின் கீழ் செயற்படுத்தப்பட்ட கைதுகளின் சட்டரீதியான தன்மை தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பப்படாமல் இருக்கவில்லை. உதாரணமாக, எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான எம் ஏ சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி, ஊடகத்தில் பின்வரும் கருத்தினை முன்வைத்தார், "சட்டப்படி நாட்டில் ஊரடங்கு இல்லை. நாங்கள் இந்த ஊரடங்கிற்குக் கட்டுப்படுவதற்கான காரணம் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையாகும்."([8]) அதேபோல், "வலுவற்ற சட்ட அடிப்படையினைக் கொண்டிருந்தாலும், மக்கள் ஊரடங்கினைப் பின்பற்றவேண்டும். ஏனெனில் கொரொனா வைரசின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான மிகச் சிறந்த வழி வீட்டில் இருப்பதே" என அவர் வேண்டுகோள் விடுத்தார்.[9]

ஊரடங்கினை மீறியவர்களுக்கு எதிராக மாத்திரமன்றி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதைத் தவிர்க்கும் கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது எனச் சந்தேகிக்கப்படுபவர்களுக்கு எதிராகவும் அவர்களுக்கு உதவுபவர்களுக்கு எதிராகவும் கைதுக்கான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.[10] "அத்தியாவசிய சேவைகளை விநியோகிக்கும் முக்கியமான பணியில் ஈடுபட்டிருக்கும் அரச அதிகாரிகளையும் ஊழியர்களையும் அநாவசியமாக விமர்சிப்பவர்களை உன்னிப்பாகக் கண்காணித்து" அவர்களைக் கைதுசெய்யுமாறு அப்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் பொலிசாருக்கு அறிவுறுத்தல் வழங்கியபோது தவறான தகவல்களைக் கட்டுப்படுத்தல் என்ற பரப்பினுள்ளும் கைதுக்கான அச்சுறுத்தல் பரவியது.[11]

பொது ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்வதற்கான ஆர்வத்தினையும் அரசாங்கம் சுட்டிக்காட்டியது. 2020 ஜூன் மாதத்தில், குளோபல் பிளக் லைவ்ஸ் மெட்டர்ஸ் இயக்கத்திற்கு ஆதரவாக புரன்ட்லைன் சோசலிசக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய ஐம்பத்திமூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர்.[12] 2021 ஆம் ஆண்டு, அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்தவர்கள், குறிப்பாக அதிபர் – ஆசிரியர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள், கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்திற்கு (KNDU) எதிர்ப்புக் காட்டியவர்கள் மற்றும் இரசாயண உரத் தடை திடீரென அறிமுகப்படுத்தியமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் எனப் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

***அரசாங்கப் பாடசாலை ஆசிரியர் ஒருவரின் வாக்குமூலம் (ஆண், 56 வயது, பேராதனை)***

*“சமூக இடைவெளி வழிகாட்டல்களைப் பின்பற்றிக் கண்டியிலும் கொழும்பிலும் நடைபெற்ற சில ஆர்ப்பாட்டங்களில் நானும் சம்பந்தப்பட்டிருந்தேன். கண்டியில் இருந்து கொழும்புக்கு நடத்தப்பட்ட அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் ஆர்ப்பாட்டப் பேரணியிலும் நான் சம்பந்தப்பட்டிருந்தேன். பலர் கைதுசெய்யப்பட்டனர். நாம் இக்கட்டான ஒரு நிலையில் இருக்கின்றோம் என்பது எனக்குத் தெரியும் – நாம் மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதா அல்லது தொற்றுத்தடைகாப்புச் சட்டத்தினைப் பேணுவதாக? நாம் பிடியை நழுவவிடக் கூடாது. ஏனெனில் அரசாங்கம் இந்தச் சூழ்நிலையினைச் சந்தர்ப்பவாதத்துடன் பயன்படுத்திவருகின்றது. இந்தப் புதிய சூழ்நிலையில் இரண்டு விடயங்களுக்கும் இடையில் சமனிலையினைப் பேணுவது இன்றியமையாததாகும்! கல்வி உரிமைக்கான போராட்டத்தில் போராடியவர்களைக் கைதுசெய்வது தனிமனித சுதந்திரத்துக்கும் உரிமைகளுக்கும் விழுந்த அடியாகும்.”*

## கைதுசெய்யப்பட்டனர்

இவ்வாறான கைதுகள் நடந்தமையினைத் தாண்டி, பல பொது ஒன்றுகூடல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதோடு மாத்திரமன்றி அவற்றில் அரசாங்கத்தின் முக்கியமான பிரமுககர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். 2020 ஆம் ஆண்டில் இதற்கான முக்கியமான உதாரணமாக முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் ஈமச்சடங்கினைக் குறிப்பிட முடியும். பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக இதில் கலந்துகொண்டனர். இதற்குச் சில நாட்களுக்கு முன்னரே பிளக் லைவ்ஸ் மெட்டர் ஊர்வலத்தில் கலந்துகொண்ட 53 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டனர்.[13] இதேபோல், 2021 ஆம் ஆண்டு, இதே தினத்திலேயே கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பசில் ராஜபக்ச புதிய நிதியமைச்சராக நியமிக்கப்பட்டதைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்ட பல பொது நிகழ்வுகள் எவ்வித அசம்பாவிதங்களும் இன்றிச் சகித்துக்கொள்ளப்பட்டன.

பெருந்தொற்றின் போது பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய சந்தர்ப்பங்களில் அவர்களைப்

பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தவேளை நீதிமன்றம் அவர்களை விளக்கமறியலில் வைக்க மறுத்தபோது ஆர்ப்பாட்டக்காரர்களை பலவந்தமாகத் தனிமைப்படுத்துவது ஒரு போக்காக உருவாகியது.[14] கொழும்பிலுள்ள அதிசிறந்த ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக முழுமுடக்க விதிகளை மீறிய சில பிரபலங்களைத் தனிமைப்படுத்தியதுடன் இந்தப் போக்கு ஆரம்பித்தது.([15]) விரைவில், ஏனைய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நீதிமன்றங்கள் பிணை வழங்கியபோதும் அவர்களும் பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.[16] இதனுடன் தொடர்புற்று, இலங்கை நீதிபதிகள் நிறுவனம் இணையவழிக் கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்து அதில் சகல நீதவான்களும் கலந்துகொள்வது கட்டாயமானது என்று பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்ட நீதிபதிகளிடத்தில் பொது ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றியமைக்காகக் கைதுசெய்யப்பட்டவர்கள் அவர்களின் முன் ஆஜர்படுத்தப்படுகையில் அவர்களை விளக்கமறியலில் வைக்க அவர்கள் தொடர்ந்து மறுத்துவந்தால் தொழில்ரீதியான பிரதிகூலங்களுக்கு அவர்கள் முகங்கொடுக்க நேரிடும் என அச்சுறுத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.[17] இக்கருத்தரங்கினைக் கண்டித்த சட்டத்தரணிகள் சங்கம் விசாரணைக்காகக் கோரிக்கை விடுத்திருக்கின்றது.[18]

## கட்டுக்காப்பில் வைத்திருக்கையில் ஏற்படும் மரணங்கள்

2020 இற்கும் 2021 இல் இற்றைவரைக்குமான காலப்பகுதியில் பொலிஸ் கட்டுக்காப்பில் இருக்கையில் ஏற்பட்ட பல மரணங்கள் பற்றி ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**ஆய்வாளர் மற்றும் நாடகாசிரியர் (ஆண், 28 வயது, மட்டக்களப்பு)**

*"பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் கட்டுக்காப்பில் இருக்கையில் பலர் மரணித்துள்ளதை நான் அறிந்துள்ளேன். இது சந்தேகநபர்கள் எனக் கருதப்படுபவர்களைக் குரூரமாக நடத்தும் முறையாகும் என்பதுடன் இது முற்றுமுழுவதும் சட்டத்திற்கு முரணானதாகும். இச்சம்பவங்களில் பெரும்பான்மையானவற்றில் பின்பற்றப்படவேண்டிய பல நீதிநெறி நடவடிக்கைமுறைகள் இருந்தன. ஆனால் இந்த நடவடிக்கைமுறைகள் பூர்த்திசெய்யப்படாது சந்தேகநபர்கள் கொல்லப்படுவதுடன் இது சட்டத்தின் ஆட்சிக்கும் முரணானதாகும். கடந்த வருடம் இடம்பெற்ற சிறைச்சாலை மரணங்களிலும் இதே நிலைமையே காணப்பட்டது. சட்டம் ஒழுங்கு என்பது அனைவருக்கும் சமமானதாக இருக்கவேண்டும். அவர்கள் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்தவர்களாக இருந்தாலும் கூட, நினைத்தவர்களெல்லாம் அவர்களைத் தண்டித்துவிட முடியாது.*

முன்னாள் சிறைக் கைதியான ஊருஜுவ என அழைக்கப்படும் மெலன் மாபுல சில நாட்களுக்கு முன்னர் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் நவகமுவ பொலிசால் கைதுசெய்யப்பட்டுச் சில நாட்களின் பின்னர் வந்துரமுல்லயில் கொல்லப்பட்டார். பொலிசாரின் கூற்றுப்படி, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ரிவால்வரைக் கண்டுபிடிக்கும் உத்தியோகபூர்வ பொலிஸ் நடவடிக்கையின் போது அவர் கைக்குண்டினைப் பயன்படுத்திப் பொலிசாரைத் தாக்க முற்பட்டபோது பொலிஸ் அதிகாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்([19]). சில நாட்களின் பின்னர், கொஸ்கட தாரக என அழைக்கப்படும் தாரக விஜேசேகர பொலிஸ் கட்டுக்காப்பில் இருக்கையில் மரணித்திருக்கின்றார். மீரிகமக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது நடைபெற்ற சம்பவத்தில் சூழ்நிலையினைக் கட்டுப்படுத்த பொலிசார் பலத்தினைப் பிரயோகிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட போது இச்சம்பவம் நடைபெற்றுள்ளது"([20]). இறந்தவர் பொலிஸ் கட்டுக்காப்பில் இருக்கையில் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என அவரின் சார்பில் செயற்பட்ட சட்டத்தரணி எச்சரித்துள்ளதன் அடிப்படையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கட்டுக்காப்பில் இருக்கையில் இடம்பெற்ற மரணங்களைக் கண்டித்துள்ளது.[21]

தனது குடும்பத்திற்காக உணவு வாங்கச் சென்ற டி சுனில் இந்திரஜித் எனும் மூன்று பிள்ளைகளின் தந்தை மரணித்திருக்கின்றார் (வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்தவர்). இந்திரஜித்தைத் தாக்குமாறு இரண்டு பொலிசார் வேறு ஒரு நபரிடம் கேட்டிருக்கின்றனர். அந்த நபரின் தாக்குதலால் வீதியில் விழுந்த இந்திரஜித்தின் மீது பஸ் ஒன்று ஏறிச் சென்றதால் அவர் மரணித்திருக்கின்றார் என இச் சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளது. பொலிசார் பார்த்திருக்கையில் இந்திரஜித்தைத் தாக்கும் காணொலி வைரலாகப் பரவியததைத் தொடர்ந்து தமது கடமையினைப் புறக்கணித்தனர் என்ற காரணத்தின் அடிப்படையில் இரண்டு பொலிசாரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[22]

கிழக்கு மாகாணத்தில் ஏறாவூர் பொலிசாரின் கட்டுக்காப்பில் இருக்கையில் சந்திரன் விதுசன் என்பவர் மரணித்திருக்கின்றார். கிரிஸ்டல் மெதம்பெடமைனை, அதாவது ஐஸ் எனப் பொதுவாக அறியப்படும் போதைப்பொருளை அளவுக்கதிகமாக எடுத்துக்கொண்டமையே மரணத்திற்கான காரணம் என விசேட மருத்துவ அதிகாரி ஒருவரால் ஆரம்பத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த அதேவேளை உயிராபத்தை ஏற்படுத்த முடியாத சிறு காயங்கள் இறந்தவரின் உடலில் காணப்பட்டமை பற்றியும் வைத்தியர் குறிப்பிட்டிருந்தார்.[23] விதுசன் அவரின் வீட்டில் இருக்கையிலேயே பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட முன்னர் விதுசனைப் பொலிசார் கோரமாகத் தாக்கியதாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். எவ்வாறாயினும், இரண்டாவது தடவை பிணக்கூறாய்வினை நடத்துவதற்காக விதுசனின் சடலத்தைத் தோண்டியெடுக்குமாறு மட்டக்களப்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.[24]

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மொஹமட் அலி பாணந்துறை வடக்குப் பொலிசாரின் கட்டுக்காப்பில் இருந்தபோது மரணித்திருக்கின்றார். ஊரடங்கினை மீறுபவர்களைக் கண்காணிக்கையில் குறிப்பிட்ட சம்பவத்திற்கு முன்னைய தினமான ஜூன் 7 ஆம் திகதி 42 வயதான நபர் பானந்துறை வடக்குப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டார். பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகையில் சந்தேகநபர் வாகனத்தின் பின் கதவினைத் திறந்து பாய்ந்திருக்கின்றார். இச்சம்பவம் தொடர்பாகப் பாணந்துறை வடக்குப் பொலிஸ்

நிலையத்தினைச் சேர்ந்த இரண்டு பொலிசார் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.[25]

பேலியகொட கெமுனு மாவத்தயில் வசித்த இரண்டு பிள்ளைகளின் தாயான 43 வயதான பெண் பொலிஸ் கட்டுக்காப்பில் இருக்கையில் மரணித்திருக்கின்றார். இரண்டு குழுக்களுக்கு இடையிலான மோதல் தொடர்பாக விசாரிக்கப் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு இக்குறிப்பிட்ட பெண் உள்ளிட்ட ஐந்து பேரைப் பேலியகொட பொலிசார் அழைத்த பின்னர் அவர்களைக் கைதுசெய்திருக்கின்றனர். இறந்த பெண்ணின் ஆரோக்கியமற்ற உடல் நிலை தொடர்பாகப் பொலிசாருக்கு அறிவித்த பின்னரும் கூட அவரை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கோ அல்லது அவருக்கு அவசியமான சிகிச்சையினை வழங்குவதற்கோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத காரணத்தினாலேயே அவர் இறந்ததாக உறவினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.[26]

இதேவேளை, பேலியகொட பொலிசாரால் 2017 பெப்ரவரி 25 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட பின்னர் பொலிசாரின் தாக்குதலால் மரணித்த கடுவெல, இஹலபோமிரியவைச் சேர்ந்த 42 வயதான சதிக் சமனின் இறப்புக்காக இலங்கைப் பொலிஸ் பத்து லட்சம் ரூபா நட்டஈட்டினை வழங்கவேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.([27]) கந்தகெத்திய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளின் தாக்குதலின் விளைவால் கொல்லப்பட்ட 17 வயதான சந்துன் மலிங்கவின் தாயாருக்கும் உயர் நீதிமன்றம் நட்ட ஈட்டினை வழங்கியுள்ளது.[28]

## பொலிசாரின் தாக்குதல் தொடர்பான முறைப்பாடுகள்

2020 மே மாதம் ஊரடங்கு வேளையில் வீதியில் சென்ற காரணத்திற்காக 14 வயது நிரம்பிய ஆடிசம் குறைபாடுடைய சிறுவனை அளுத்கம, தர்ஹா நகரப் பொலிசார் தாக்கியிருக்கின்றனர். சிறுவனை விசாரித்த பொலிஸ் குழு ஒன்று அவரை வீதி வழியே ஒரு சோதனைச் சாவடிக்கு இழுத்துச்சென்று அங்கே அச்சிறுவனை மாறி மாறித் தாக்கியமையும் அவர்களுடன் சேர்ந்து வீதியால் சென்றவர்களும் தாக்கியமையும் சிசிடிவி கமராக்களில் பதிவாகிப் பின்னர் சமூக ஊடகங்களில் வைரலாகியது. பின்னர் அந்தச் சிறுவனைப் பொலிசார் சோதனைச் சாவடிக்குப் பின்னால் இருந்த மரத்தில் கட்டிவைத்திருக்கின்றனர். எவ்வாறாயினும் சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட சிறுவனின் தந்தை சாவடிக்கு வந்து பொலிசாரிடம் மகன் ஆடிசம் குறைபாடுடையவர் என்பதை உணர்த்திய பின்னரே அவரை வீட்டுக்கு அழைத்துச்செல்ல அவர்கள் அனுமதித்தனர்.[29]

தாக்கியவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.[30]

ஹக்மனவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஹக்மன பொலிசாரால் 2021 ஜனவரி 07 ஆம் திகதி தாக்கப்பட்டிருக்கின்றார். அயலவர் ஒருவர்

**சிறு வியாபாரி மற்றும் சிவில் சமூகத் துறைச் செயற்பாட்டாளர் (பெண், 30 வயது, களுத்தறை)**

*"பொலிஸ் கட்டுக்காப்பில் இருந்தவேளை சந்தேகநபர்களுக்கு ஏற்பட்ட மரணங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நான் மிகுந்த கரிசனை கொண்டிருந்தேன். இவ்வகையான சம்பவங்கள் தவிர்க்கப்படவேண்டும் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் வாழ்வதற்கான உரிமை அனைவருக்கும் பொதுவானதாகும். பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் சந்தேகநபர்கள் என யாரையாவது கைதுசெய்தாலும் கூட இந்த உரிமை அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கும் இருக்கின்றது. அவர்கள் குற்றமிழைத்தவர்கள் என நிரூபிக்கப்பட்டாலும் அவர்களைத் தண்டிப்பதற்குச் சட்ட நடவடிக்கைமுறைகள் அமுலில் உள்ளன. சந்தேகநபர்கள் எனப்படுபவர்களதும் சிறைக்கைதிகளதும் பாதுகாப்பிற்குப் பொலிசாரும் ஏனைய பாதுகாப்புப் படையினரும் பொறுப்பாக இருக்கவேண்டும். "ஆம், இவர்கள் போதைப் பொருள் விற்பவர்கள், குற்றச்செயல் புரிபவர்கள், பாதாள உலக உறுப்பினர்கள்" எனக் கூறி இச்சம்பவங்களைப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்வதை வழமையாகக் கொண்டிருந்தாலும், சட்டத்தின்படி விடயங்கள் நடைபெற்று அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படும் வரை இவ்வாறு கருத முடியாது."*

பாதிக்கப்பட்டவருடனும் அவரின் உறவினர்கள் சிலருடனும் மது அருந்துவதற்காக ஒன்றுசேர்ந்த போது அயலவர்களுக்கு இடையில் ஏற்பட்ட பிணக்கினாலேயே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது. அயலவரின் மனைவிக்கும் இளைஞர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. தனது கணவருக்கு இளைஞர்கள்தான் மதுவருந்தக் கொடுத்துள்ளனர் என அந்தப் பெண் இளைஞர்கள் மீது குற்றம் சாட்டியிருக்கின்றார். அன்று அதிகாலை 1 மணியளவில் உபபொலிஸ் ஆய்வாளர் சாந்த கருணாரத்ன அவ்விடத்திற்கு வருகை தந்து பாதிக்கப்பட்டவரைக் கைதுசெய்ததுடன் ஆய்வாளரும் ஏனைய பொலிஸ் அதிகாரிகளும் அவரைப் பொல்லினால் அவ்விடத்தில் வைத்துத் தாக்கியதுடன் பின்னர் பொலிஸ் நிலையத்தில் வைத்தும் தாக்கியிருக்கின்றார்கள். பின்னர் பாதிக்கப்பட்டவர்

வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது வைத்தியரிடம் தாக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடக்கூடாது என்றும் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார். பொலிஸ் நிலையத்திற்கு மீண்டும் அழைத்து வரப்பட்ட பின்னரும் பாதிக்கப்பட்டவரைத் தும்புத்தடியினால் தாக்கியிருக்கின்றனர். தாக்குதலின் காரணமாகத் தனக்கு ஏராளமான காயங்கள் ஏற்பட்டதாகவும் சிறுநீருடன் குருதி வெளியானதாகவும் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்திருக்கின்றார். நீதவான் முன் ஆஜர்படுத்தப்பட்டபோது பொலிசாரால் தான் தாக்கப்பட்டமை பற்றியும் தனக்கு

ஏற்பட்ட காயங்கள் பற்றியும் பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்டிருக்கின்றார். புதிதாக மருத்துவப் பரிசோதனை நீதிமன்றத்தின் சட்டத்துறைப் பணியாள் (பிஸ்கால்) மூலமாக மேற்கொள்ளப்படவேண்டும் என உத்தரவிட்ட நீதவான் பாதிக்கப்பட்டவருக்குப் பிணை வழங்கினார்.[31]

முன்னாள் மாகாண ஆளுநரின் மகனான சட்டபீட இறுதியாண்டு மாணவர் ஒருவர் பேலியகொட பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸ் அதிகாரிகளால் 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி தாக்கப்பட்டிருக்கின்றார். பாதிக்கப்பட்டவரின் சட்டத்தரணியின் கருத்துப்படி, பாதிக்கப்பட்டவரின் சகோதரரர் ஒருவர் சட்டத்தரணி என்பதுவும் அச்சட்டத்தரணியின் கட்சிக்காரருக்கு உணவுப் பொதி வழங்கப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோதே தாக்கப்பட்டுள்ளார் என்பதுவும் தெரியவந்துள்ளது. பாதிக்கப்பட்டவர் தன்னை ஒரு சட்டத்தரணி என அறிமுகப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி

**ஆய்வாளர் மற்றும் நாடகாசிரியர் (ஆண், 28 வயது, மட்டக்களப்பு)**

“கிராமங்களில் தகவல் கொடுக்கும் பலர் மறைந்திருக்கின்றார்கள். இவர்கள் சிஐடி புலனாய்வுச் சேவை முகவர்கள் போன்றவர்கள். வெளியே சென்ற சந்தர்ப்பங்களில் மக்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய சில முறைப்பாடுகள் உள்ளன. இது சட்டத்தினை அமுல்படுத்தும் குரூரமான வழியாகும். மேலும், யுத்தத்துக்குப் பின்னரான வடக்கு மற்றும் கிழக்கில் இது பொதுவான அணுகுமுறையாகக் காணப்படுகின்றது. ஆயுதப் படையினரில் பெரும்பான்மையானவர்கள் சிங்களவர்களாக இருந்தபோதிலும் பல தமிழர்களும் முஸ்லிம்களும் ஆயுதப் படையில் இருக்கின்றனர். இவர்களின் அணுகுமுறையும் இதேபோன்றே காணப்படுகின்றது. குறிப்பாக ஏறாவூர்ச் சம்பவத்தில் இதைக் கண்கூடாகக் காணமுடிந்தது. தொற்றுத்தடைகாப்புச் சட்டத்தினை மீறியமைக்காக இதன்போது ஆயுதப் படையினர் சில முஸ்லிம்களை முழந்தாளிடுமாறு பலவந்தப்படுத்தினர். தற்போது நிலவும் பெருந்தொற்றுச் சூழலில் தொற்றுத்தடைகாப்புச் சட்டத்தினைப் பேணவேண்டியது முக்கியமானதுதான் என்றபோதிலும் அதனைச் செய்வதற்கான ஒரு முறையான வழி இருக்கின்றது. பொதுமக்களுக்காக, சட்டத்தினை இவ்வாறு பயன்படுத்துவது அதற்கான சிறந்த வழியல்ல.”

குறிப்பிட்டிருந்தார். சம்பவத்திற்குச் சட்டத்தரணிகள் சங்கம் உடனடியாக பதிற்செயற்பாடாற்றியிருந்ததுடன் விசாரணைகளுக்கும் சட்ட நடவடிக்கைக்கும் அழைப்பு விடுத்திருந்தது. சில நாட்களிலேயே நான்கு பொலிஸ் அதிகாரிகள் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்துள்ளனர்.[32]

கைதுசெய்யப்பட்டு கல்கிசை நீதவான் முன்பு ஆஜர்படுத்தப்பட்ட களுபோவிலையினைச் சேர்ந்த நபர் ஒருவர் விடுதலை செய்யப்பட்ட பின்னர் மரணித்திருக்கின்றார். மோட்டார் சைக்கிள் திருத்துனராகத் தொழில்புரிந்துவந்த இந்த நபர் தனது மகனுக்கு மதிய உணவு வழங்குவதற்காக அவரின் வேலைத்தளத்திற்குத் தனது மோட்டார் சைக்கிளில் 2021 மார்ச் மாதத்தில் ஒருநாள் சென்றுகொண்டிருக்கையில் இரத்மலான பிரதேசத்தில் வைத்து இவரைக் கைதுசெய்த பொலிசார் கள்ளக்கடத்தல் பொருட்களை அவர் எங்கே ஒளித்துவைத்திருக்கின்றார் எனக் கேட்டிருக்கின்றனர். தனது கைது பற்றித் தனது வீட்டார் எவருக்கும் தெரியவராது என அறிந்துகொண்ட இந்த நபர் தனது வீட்டுக்கு அருகில் பொலிசார் தன்னைக் கூட்டிச் செல்வார்கள் என்பதற்காகத் தான் அவற்றினை வீட்டுக்கு அருகில் வைத்திருப்பதாகப் பொய் கூறியிருக்கின்றார். அங்கேயும் வைத்துப் பொலிசார் இவரைத் தொடர்ந்து

தாக்கிக் கள்ளக்கடத்தல் பொருட்கள் எங்கே எனக் காட்டுமாறு கேட்டிருக்கின்றனர். தாக்கப்பட்டதை இவரின் குடும்பத்தினர் கண்கூடாகக் கண்டிருக்கின்றனர். சம்பந்தப்பட்ட நபரின் மனைவியின் வாக்குமூலத்தின் படி, சம்பந்தப்பட்ட நபரின் தந்திரத்தை அறிந்துகொண்ட பொலிசார் பொலிஸ் நிலையத்தில் வைத்தும் இவரைத் தாக்கியிருக்கின்றனர். மார்ச் 19 ஆம் திகதி நீதவான் முன்பு ஆஜர்படுத்தப்பட்டபோது 50 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டினைப் பாதிக்கப்பட்டவர் ஒப்புக்கொண்டிருக்கின்றார். விதிக்கப்பட்ட குற்றப்பணத்தினைச் செலுத்திய இவர் விடுவிக்கப்பட்டு வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். தாக்குதல்களைத் தொடர்ந்து இவர் சுகவீனமுற்றே காணப்பட்டார். இவர் தனது குடும்பத்தினருடன் பகிர்ந்துகொண்ட தகவல்களின் படி, பொலிசார் இவரை ஒரு பெஞ்சில் கட்டிவைத்து இவரின் மூக்கு வழியே ஒரு டியூபைச் சொருகியிருக்கின்றனர். இந்த டியூப்பின் வழியே இவரின் உடலினுள் பொலிசார் நீரை ஊற்றியிருக்கின்றனர். பின்பு பெற்றோலையும் ஊற்றியிருக்கின்றனர். இவரின் உடலில் பல காயங்கள் காணப்பட்டிருக்கின்றன. இவரின் உடல் நிலை மோசமடைந்த காரணத்தினால் இவரின் மனைவி இவரை மார்ச் 21 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதித்திருக்கின்றார். வைத்தியசாலையில் ஐந்து நாட்கள் சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் இவர் வீடு திரும்பியிருக்கின்றார். ஆனால் இவர் முன்பிருந்த நிலைக்குத் திரும்பவில்லை. இவர் மீண்டும் மார்ச் 31 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். அடுத்த நாள் இறந்துவிட்டார். நியூமோனியா காரணமாக இவர் இறந்ததாகப் பிரேத பரிசோதனையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குடும்பத்தினரின் வற்புறுத்தலின் காரணமாகப் பிணக்கூறாய்வு நடத்தப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை சிரேஷ்ட பொலிஸ் சுப்பரிண்டன்ட் ஒருவர் மேற்கொண்டு வருவதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.[33]

மோட்டார் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் லொறிச் சாரதி ஒருவரைத் தாக்கிய சம்பவம் ஒன்று 2021 மார்ச் 29 ஆம் திகதி பன்னிப்பிட்டியவில் இடம்பெற்றுள்து. சாரதியினை நிலத்தில் தள்ளி வீழ்த்தி அவரின் மீது அப்பொலிஸ் உத்தியோகத்தர் துள்ளிக் குதிப்பதைக் காட்டும் காட்சியினைக் காணொளிகள் காட்டின. இந்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாக மாறியது. அறிக்கைகளின் படி, சாரதி ஓட்டிவந்த லொறி தற்செயலாக அதிகாரியின் மீது மோதியமையே அதிகாரியின் கோபத்திற்கான காரணமாகும் எனத் தெரியவந்தது.[34]

மருந்து வாங்க மருந்தகத்திற்குச் சென்ற நபர் ஒருவர் 2021 மே மாதம் 09 ஆம் திகதி யக்கலமுல்ல பொலிசாரால் தாக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். யக்கலமுல்ல பொலிஸ் நிலையத்தினை ஒட்டி யக்கலமுல்ல சந்திக்கு அருகில் இனந்தெரியாத நபர்கள் பட்டாசு கொளுத்தியதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. குறிப்பிட்ட நபர் மருந்தகத்தில் இருந்தபோது சத்தத்தினைக் கேட்டு வெளியே வந்திருக்கின்றார். பெருந்தொற்று நேரத்தில் யார் பட்டாசு கொளுத்துகின்றனர் என்று அறியும் ஆவலில் இவர் வெளியே வந்திருக்கின்றார். அவர் பார்த்துக்கொண்டிருக்கையில் பல அதிகாரிகள், அவர்களில் ஒருவர் மட்டுமே சீருடையில் இருந்திருக்கின்றார், சத்தத்திற்கான காரணத்தினை அறிவதற்காக நிலையத்தினை விட்டு வெளியேவந்து அவ்வழியே சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவரைத் தாக்கியிருக்கின்றனர். இதையடுத்து மருந்தகத்தில் இருந்து வெளியே வந்து பார்த்துக்கொண்டிருந்த இந்த நபரின் அருகில் வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் இவரைத் தாக்கத் தொடங்கியதுடன் பட்டாசைக் கொளுத்தியது இவரா என்றும் கேட்டிருக்கின்றார். பாதிக்கப்பட்டவர் மருந்து வாங்கவே வந்தார் என்று கூறி அவரை மருந்தக உரிமையாளர் காப்பாற்ற முயன்றிருக்கின்றார். ஆனால் அதைக் காதில் வாங்காத அதிகாரி பாதிக்கப்பட்வரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கின்றார். அங்கேயும் வைத்து இவருக்கு அடித்திருக்கின்றார்கள். மருந்தக உரிமையாளர் தனக்குத் தெரிந்த இன்னொருவருடன் பாதிக்கப்பட்டவரைப் பார்ப்பதற்காகப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது பொலிசாரால் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. தனது மருந்தகத்தில் பொருத்தியிருந்த சிசிடிவி கமராவில் இருந்த காணொளியினைத் தனது தொலைபேசிக்கு மாற்றிய மருந்தக உரிமையாளர் அரை மணித்தியாலங்களின் பின்னர் மீண்டும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அந்தக் காணொளியைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் காட்டி அவரை விடுவிக்குமாறு கோரியிருக்கின்றார். காணொளியைப் பார்த்த அதிகாரி அடுத்த நாள் காலையிலேயே பாதிக்கப்பட்டவரை விடுவித்திருக்கின்றார் (காணொளி காட்டப்பட்டு கிட்டத்தட்ட 12 மணித்தியாலங்களின் பின்னர்). அவரைக் கைது செய்தது ஒரு சிறிய தவறு என அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர் தனது தாக்குதலைப் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருக்கின்றார். தாக்குதலின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் இரண்டு நாட்கள் சிகிச்சை பெற நேரிட்டது.[35]

ஹம்பாந்தோட்டை, பல்லகஸ்வெவவில் வசிக்கும் இரு பிள்ளைகளின் தந்தையான நபர் ஒருவர் (2021?) ஜுன் மாதத்தில் பொலிசாரால் தாக்கப்பட்டிருக்கின்றார். தனக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் சுமத்தப்பட்ட முறைப்பாட்டுக்குப் பதிலளிப்பதற்காக இவர் அங்கே சென்றபோதே தாக்கப்பட்டிருக்கின்றார். இவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றதும் முறைப்பாட்டாளரான பெண் இவரை உப பொலிஸ் ஆய்வாளரிடம் சுட்டிக்காட்டியதும் அந்த ஆய்வாளர் இவரின் கன்னத்தில் அறைந்திருக்கின்றார். பின்னர் பாதிக்கப்பட்டவரை ஒரு கதிரையில் அமரவைத்து அவரின் தலையிலும் முகத்திலும் உடலிலும் அந்த அதிகாரி அடித்து அவரைக் கூண்டில் அடைத்துள்ளார். கூண்டில் அடைக்கப்பட்டவரை அன்றிரவும் அடுத்த நாளும் பொலிஸ் அதிகாரிகள் தாக்கியிருக்கின்றார்கள்.[36]

தனது கணவருடன் முறைப்பாடு ஒன்றினை மேற்கொள்வதற்காகப் பாதுக்க பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற இளம் தாய் ஒருவர் தனது கணவரை எக்காரணமும் இன்றிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்த பின்னர் தன் மீது பொலிஸ் அதிகாரிகள் பாலியல் ரீதியாகத் தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றார். இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவத்தினை இவர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார்.[37]

ஹம்பாந்தோட்டையினைச் சேர்ந்த இரண்டு பதின்பருவத்தினர் மிரிஜ்ஜிவல தொழில்நுட்பக் கல்லூரியில் சிரமதானப் பணிகளை முடித்துவிட்டுத் தங்களின் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருக்கையில் மதுபோதையில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரினால் 2021 ஜுலை 5 ஆம் திகதி தாக்கப்பட்டிருக்கின்றனர். மோட்டார் சைக்களில் வந்த பொலிஸ் அதிகாரி இவர்களின் கொவிட் தடுப்பு முகக்கவசத்தினைக் கழற்றுமாறு கோரியிருக்கின்றார். அவ்வாறு அகற்ற மறுத்ததும் அதிகாரி இவர்களைத் தாக்கியிருக்கின்றார். அப்போது சிவில் ஆடையில் இருந்த பொலிஸ் அதிகாரி ஹம்பாந்தோட்டை துறைமுகப் பொலிசைச் சேர்ந்தவர் எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டார்.[38]

கோட்டவில பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கோட்டவில பொலிஸ் அதிகாரிகளால் 2021 ஆகஸ்ட் மாதத்தில் தாக்கப்பட்டிருக்கின்றார். பாதிக்கப்பட்டவர் தங்களின் மகனுக்குக் கல்லெறிந்தார் என்று அயலவர் ஒருவர் குற்றஞ்சாட்டியிருந்தார். பொலிசால் அழைக்கப்பட்டதும் பாதிக்கப்பட்டவர் தனது குற்றச்சாட்டிற்கு பதிலளிப்பதற்காக ஆகஸ்ட் 3 ஆம் திகதி பொலிஸ் நிலையத்திற்கு வந்திருக்கின்றார். எவ்வாறாயினும்

தான் பொலிஸ் நிலையத்திற்கு வந்ததும் தனது மனைவி முன்னிலையில் தன்மீது பொலிசாரால் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்டிருக்கின்றார். பொலிசாரால் விடுவிக்கப்பட்டதும் சிகிச்சைக்காக இவர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.[39]

## நீதிநெறி ஆணைத் துர்ப்பிரயோகம்

நாடு முழுமுடக்கத்தில் இருந்தபோது 2020 ஏப்ரில் மாதம் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லாஹ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இவ்வாறான தடுத்துவைப்புக்குப் பாதுகாப்பு அமைச்சர் அதிகாரமளிக்கவேண்டும் எனப் பயங்கரவாதத் தடைச் சட்டம் தேவைப்படுத்துகின்ற போதிலும் இவரை வீட்டில் இருந்து அழைத்துச் செல்லக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் இவரின் வீட்டுக்கு வந்தபோது பாதுகாப்பு அமைச்சர் என எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எவை பற்றியும் இவரிடம் அறிவிக்கப்படவில்லை. இருப்பினும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பொறுப்பான சில தரப்பினர்களின் தகப்பனாருக்காக இவர் பிரதிநிதித்துவம் செய்தார் என அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவித்திருந்தனர். இவர் இற்றைவரை தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்.[40]

மன்னாரைச் சேர்ந்த தனியார் ஆசிரியரான அஹ்னாப் ஜசீம் 2019 இல் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஆதாரப்படுத்தப்படாத தொடர்புகளுக்காக 2020 இல் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். இவர் வெளியிட்ட கவிதை நூல் ஒன்று ஹெஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வுடன் தொடர்புடைய இடம் ஒன்றில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். இந்த இடம் பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கான அறக்கொடைப் பாடசாலையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த இடத்தினை முற்றுகையிட்ட அதிகாரிகள் நூலைக் கண்டுபிடித்த பின்னர் அஹ்னப் ஜசீமைக் கைதுசெய்திருக்கின்றனர். இந்த நூல் தமிழ் நூல் என்பதையும் அந்த அதிகாரிகளுக்கு அதில் உள்ள எவற்றினையும் புரிந்துகொள்ள அவர்களால் தமிழ் மொழியினை வாசிக்கவும் முடியாது அல்லது புரிந்துகொள்ளவும் முடியாது என்பதையும் தாண்டியே இந்தக் கைது இடம்பெற்றிருக்கின்றது. இவர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அதிகாரிகள் நூலின் மொழிபெயர்ப்பினைப் பெற்று அதனைச் சிறுவர் உளவியலாளர்களின் குழாம் ஒன்றின் அதிகாரிகளின் மதிப்பீட்டுக்காக

முன்வைத்திருக்கின்றனர். இந்த உளவியலாளர் குழாம் இந்த நூலை "வன்முறைமிக்கது, பாலியல் உணர்வுகளைத் தூண்டுகின்றது, தற்கொலையை ஊக்குவிக்கின்றது, மரணத்தினை மகிமைப்படுத்துகின்றது, உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்களுக்கெதிரான புலனுணரப்பட்ட அநீதி பற்றிப் பேசுகின்றது என்றும் சில கவிதைகள் வன்முறை நிகழ்த்தியவர்களுக்கு எதிராக வெறுப்பினைத் தூண்டுகின்றது" என்றும் கூறியிருக்கின்றது. எவ்வாறாயினும், பிரபலமான கலைஞர்களும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் இந்த முடிவுடன் முரண்பட்டு கவிதை நூல் அஹிம்சையினை ஊக்குவிக்கின்றது எனக் கூறியிருக்கின்றனர்.[41]

## முடிவு

வேறு இடங்களில் வெளிக்காட்டப்பட்டது போல் பெருந்தொற்றானது இலங்கைச் சமுதாயத்தில் இழையோடும் பல பிளவுகளை, குறிப்பாகப் பல தசாப்தங்களாக நிலைத்திருக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகைள வெளிக்காட்டியுள்ளது. இவ்வாறான ஏற்றத்தாழ்வுகள் வறியவர்கள் மீது பாரிய பாதிப்புறுநிலைகளை ஏற்படுத்துவதுடன் இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டுவது போல் தனிநபர் சுதந்திரத்தின் மீது பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கம் பாதிக்கப்பட்டவரின் சமூகபொருளாதார நிலையினாலும் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்கள் வருகின்ற மாதங்களில், இல்லாவிடின் வருகின்ற வருடங்களில் பெருந்தொற்றுக்கான அவற்றின் பதிற்செயற்பாட்டினைத் தொடர்கையில் இந்த ஏற்றத்தாழ்வுகளை அடையாளம் காணவேண்டும். அரசுகளின் வல்லந்த அதிகாரத்தினை வலியுறுத்தும் அணுகுமுறைகள் தோல்வியுறும் என்பதோடு மாத்திரமன்றிப் புதிய கொரொனா வைரசைக் கடந்து வாழும் ஆறாத வடுக்களையும் அவை சமூகத்தில் ஏற்படுத்திவிடும். இலங்கை அரசாங்கம் தற்போது காட்டிவரும் அதன் பலத்தைக் கைவிடுவதன் மூலம் உலகிற்கு ஓர் உதாரணத்தினை எடுத்துக்காட்டி பதிலாக, பாதிக்கப்பட்ட சமுதாயங்களுடன் கட்டியெழுப்பும் உறவிலும் பிரசைகளின் ஒத்துழைப்பினைப் போஷிக்கும் சாதகமான தொடர்பாடல்களிலும் தங்கியிருக்கும் அணுகுமுறையினை நோக்கி நகர்ந்து, மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் உடனடி நிவாரணத்தினை வழங்கி, நிபுணத்துவ ஆலோசனையின் பேரில் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.

# உசாவல்கள்


1. கொவிட் 19 தொற்றுக்கெதிரான செயற்பாடுகளுக்காக அரசாங்கம் தேசிய செயற்பாட்டு மையத்தினை ஆரம்பித்துள்ளது Daily FT [Internet]. 2020 March 18. Available at: https://www.ft.lk/News/Govt-launches-National-Ops-Centre-to-counter-COVID-19/56-697707

2. தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கையில் முழுமுடக்கப் பாணியிலான ஊரடங்கில் சந்தைகள் நிலைகுலைகின்றன [Internet]. 2020 March 20. Available from: https://economynext.com/sri-lanka-in-lockdown-style-coronavirus-curfew-as-count-moves-up-markets-wobble-60503 /

3. ஊரடங்கை மீறிய மேலும் 809 பேர் பொலிசாரின் வலையில் சிக்கினர் [internet]. 2020 March 20. Available at: https://www.ft.lk/BREAKING-NEWS/Police-net-809-more-curfew-violators/10526-698240

4. ஊரடங்கை மீறிய 34,500 பேர் கைது Ada Derana [Internet]. 2020 April 21. Available at: http://www.adaderana.lk/news/62869/34500-curfew-violators-arrested

5. "தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறுவது ஆறு மாத சிறைத்தண்டனைக்கு இட்டுச்செல்லும்: டிஐஜி". News 1st [Internet]. 2020 April 23. Available from: https://www.newsfirst.lk/2020/04/23/violating-quarantine-curfew-will-lead-to-06-months-in-prison-dig

6. சிறைகளில் கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காகக் கைதிகளை விடுவிக்கக் கோரும் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு. Daily FT [Internet], 2020 March 26. Available at: https://www.ft.lk/breaking_news/Letter-sent-to-President-on-release-of-prisoners-to-prevent-spread-of-COVID-19-in-prisons/10526-698065

7. கொவிட் 19 அச்சத்தால் சுமார் 3000 கைதிகள் விடுவிப்பு Daily FT [Internet]. 2021 April 5. Available at: https://www.ft.lk/breaking_news/Nearly-3000-prisoners-released-over-COVID-19-fears/10526-698516

8. ஊரடங்கு சட்டவிரோதமானது எனச் சுமந்திரன் வாதம், ராமநாயக்க பிணையில் விடுதலை. Colombo Telegraph [Internet].2020 April 20. Available at: https://www.colombotelegraph.com/index.php/sumanthiran-argues-curfew-illegal-gets-ramanayake-released-on-bail /

9. Ibid.

10. கொவிட் 19 நோய்க்குறிகளை மறைக்க உதவுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் News 1st [Internet]. 2020 April 11. Available at: https://www.newsfirst.lk/2020/04/11/legal-action-against-those-who-aid-to-conceal-covid-19-symptoms/

11. ஒன்லைன் போலித் தகவல்களுக்கு எதிராகவும் தீயநோக்குடன் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு எதிராகவும் பொலிசார் கடும் நடவடிக்கை எடுக்க முஸ்தீபு Daily FT

[Internet]. 2020 April 1.Available from: https://www.ft.lk/news/Police-to-take-strict-action-against-online-fake-news-and-malicious-attacks/56-698401

12. பொலிசாருக்கு எதிராக NSP சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது. Daily FT [Internet]. 2020 June 12. Available at: https://www.ft.lk/News/NSP-to-take-legal-action-against-Police/56-701528

13. தொண்டமானின் பூதவுடல் நாளை பாராளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். EconomyNext [Internet]. 2020 May 27. Available at: https://economynext.com/thondamans-remains-to-lie-in-state-in-parliament-tomorrow-70397/

14 பார்க்க, உதா: கொவிட் உயிரிழப்புக்கள், தன்னிச்சையான கைதுகள் மற்றும் அரசின் பொறுப்பு [Internet]. 2020 August 12. Available at: https://www.ft.lk/opinion/COVID-carnage-arbitrary-arrests-and-regime-responsibility/14-721608

15. சந்திமல் ஜயசிங்ஹ மற்றும் பியூமி ஹன்சமாலி கைது Ada Derana [Internet]. 2021 May 31. Available at: daderana.lk/news/74273/chandimal-jayasinghe-and-piumi-hansamali-arrested

16. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகப் பொலிசாரின் நடவடிக்கைகள்: சங்கங்கள் கரிசணையினை வெளியிட்டுள்ளன, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தாம் அங்கீகாரம் வழங்கியதை மறுத்துள்ளனர் Print Edition - The Sunday Times. 2021 July 11. Available at: https://www.sundaytimes.lk/210711/news/police-action-against-protestors-unions-express-concern-phis-deny-they-gave-approval-449049.html

17. நீதிபதிகளின் வெபினார்: கரிசனைகள் அதிகரித்துள்ளன. News 1st [Internet]. 2021 August 17. Available at: https://www.newsfirst.lk/2021/08/17/judges-webinar-concerns-grow /.

18. இலங்கை எதிர்ப்பு, நீதிபதிகளுக்கான வெபினார் தொடர்பாகச் சட்டத்தரணிகள் ஆழமான கரிசணைகளை வெளியிட்டுள்ளனர். EconomyNext [Internet]. 2021 August 17. Available at: https://economynext.com/sri-lanka-opposition-bar-express-deep-concern-over-covid-19-webinar-for-judges-85067 /

19. இலங்கையில் விடுவிக்கப்பட்ட விளக்கமறியல் கைதி கடத்தப்பட்டுப் படுகொலை SLCAT [Internet]. 2021 May 12. Available at: https://www.slcat.org/released-remand-prisoner-abducted-and-assassinated-in-sri-lanka/; see also, Underworld leader 'Urujuwa' killed by Police fire; he was wanted for murder & extortion. News 1st [Internet]. 2021 May 12. Available at: https://www.newsfirst.lk/2021/05/12/underworld-leader-urujuwa-killed-by-police-fire-he-was-wanted-for-murder-extortion /

20. குற்றவாளி 'கொஸ்கொட தாரக பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் கொலை. News 1st [Internet] 2021 May 13. Available at https://www.newsfirst.lk/2021/05/13/criminal-leader-kosgoda-tharaka-killed-by-police-fire/

21. 'ஊரு ஜுவா' மற்றும் கொஸ்கொட தாரக ஆகியோரின் கொலை தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைக்கு அழைப்பு. The Island [Internet]. 2021 May 16. Available at: https://island.lk/basl-calls-for-independent-and-impartial-probe-into-killing-of-uru-juwa-kosgoda-tharaka /

22.தனது குடும்பத்திற்காக உணவு தேடிச்சென்ற நபர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார் – Basil Fernando. - SLCAT [Internet].2021 May 30. Available at https://www.slcat.org/a-man-who-went-in-search-for-food-for-his-family-beaten-and-killed-basil-fernando / ; වැලිගම වරාය සේවකයාගේ මරණය අභිරහසක්. SLCAT [Internet]. 2021 May 28

23. மட்டக்களப்பில் பொலிஸ் கட்டுக்காப்பில் சந்தேகநபர் ஒருவர் மரணித்துள்ளார். SLCAT [Internet]. 2021 June 4. Available at: https://www.slcat.org/a-suspect-has-died-in-police-custody-in-batticaloa /

24. இலங்கையில் பொலிஸ் கட்டுக்காப்பில் மரணம்: தமிழ் இளைஞரின் சடலம் மீண்டும் தோண்டியெடுக்கப்படவுள்ளது.JDS [Internet]. 2021 May 20. Available at: http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/1029-death-in-sri-lankas-police-custody-tamil-youths-body-to-be-exhumed

25. சந்தேகநபர் ஜீப்பில் இருந்து பாய்ந்து மரணித்ததைத் தொடர்ந்து இரண்டு இலங்கைப் பொலிசார் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். EconomyNext [Internet]. 2021 June 7. Available at: https://economynext.com/two-sri-lanka-police-officers-interdicted-after-suspect-jumps-off-jeep-to-death-82729 /

26. பேலியகொட பொலிஸ் நிலையத்தில் மற்றொரு மரணம்! SLCAT [Internet] 2021 July 17. Available at: https://www.slcat.org/another-death-at-peliyagoda-police-station /

27. பொலிசாரின் தாக்குதலால் மரணித்த சேர்மனுக்கு ஒரு மில்லியன் ரூபா நட்டஈடு! - SLCAT [Internet]. 2021 July 15. Available at: https://www.slcat.org/one-million-rupees-compensation-for-sherman-who-died-of-police-assault/?utm_source=rss&utm_medium=rss&utm_campaign=one-million-rupees-compensation-for-sherman-who-died-of-police-assault

28. கண்டகெடிய தீர்ப்பு மற்றும் அரச கட்டுக்காப்பில் தொடரும் மரணங்கள் – Ruki Fernando. SLCAT [Internet]. 2021 July 2. Available at: https://www.slcat.org/kandaketiya-judgement-and-continuing-deaths-in-state-custody-ruki-fernando /

29. ஆடிசம் குறைபாடுடைய சிறுவன் மீது பொலிசாரின் தாக்குதல் பற்றிய விசாரணை ஆரம்பம் Colombo Gazette [Internet]. 2020 June 4. Available at : https://colombogazette.com/2020/06/04/probe-launched-into-assault-on-autistic-boy-by-police /

30. தற்புனைவு ஆழ்வு (autism) குறைபாடுடைய சிறுவன் துன்புறுத்தப்பட்டமை பற்றிய மனித உரிமைகள் மனுவினை முன்னெடுக்க அனுமதி. SLCAT [Internet]. 2021 April 2. Available at: https://www.slcat.org/human-rights-petition-for-tortured-autistic-boy-granted-leave-to-proceed /

31. පොලිස් වදහිංසාවට තවත් උදාහරණයක්! - slcat (n.d.)

32. சட்ட மாணவர் மீது தாக்குதல்: பொலிசாரின் குரூரம் தொடர்பில் பூச்சியச் சகிப்புத்தன்மையினைக் கோரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்Attack on law student: The Sunday Times [Internet]. 2021 Feb 28. Available at: https://www.sundaytimes.lk/210228/news/attack-on-law-student-basl-wants-zero-tolerance-for-police-brutality-434127.html

33. ගල්කිස්සේ මිය ගිය සැකකරුට නියුමෝනියාව හැදුනේ පොලිස් වධහිංසා වලින්ද? - aithiya (2.4.2021)

34. சித்திரவதை செய்யப்பட்ட இலங்கையர் தனது அனுபவத்தினை விபரிக்கின்றார். SLCAT [Internet] 2021 April 2. Available at: https://www.slcat.org/sri-lankan-tortured-man-describes-his-experience /

35. யக்கலமுல்ல பொலிஸ், வீதியில் சென்ற மனிதர் மீது தாக்குதல்! SLCAT [Internet]. 2021 May 28. Available at: https://www.slcat.org/yakkalamulla-police-assault-a-man-on-the-road /

36. ஹம்பாந்தோட்டைத் துறைமுகப் பொலிஸ் பற்றிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை ஆரம்பம் SLCAT [Internet]. 2021 July 13. Available at: https://www.slcat.org/hrcsl-launch-an-investigation-over-hambantota-port-police /

37. பாதுக்க பொலிஸ் நிலையத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான இளம் தாயின் முறைப்பாடு SLCAT [Internet]. 2021 July 21. Available at: https://www.slcat.org/the-complaint-by-a-young-mother-of-sexual-harassment-suffered-at-the-padukka-police-station /

38. பதினாறு வயது மாணவர்கள் இருவரைக் குடிபோதையில் இருந்த பொலிசார் தாக்கியுள்ளனர் SLCAT [Internet]. 2021 July 10. Available at: https://www.slcat.org/a-drunken-police-constable-assaults-two-16-year-old-students /

39. சந்தேக நபரைக் கிரிக்கட் ஸ்டம்பினால் தாக்கிய கோடவில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி. SLCAT [Internet]. 2021 August 11. Available at: https://www.slcat.org/kotawila-police-oic-assaulted-suspect-with-cricket-stump /

40.குற்றச்சாட்டுக்கள் இன்றி ஒரு முஸ்லிம் சட்டத்தரணியை இலங்கை ஏன் சிறையில் அடைத்துவைத்துள்ளது | Human Rights News. Al Jazeera [Internet]. 2020 October 15. Available at: https://www.aljazeera.com/news/2020/10/15/sri-lanka-muslim-lawyer

41.கவித்துவமான அநீதி: மற்றொரு எழுத்தாளர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் வாடுகின்றார் Daily FT [Internet]. 2021 December 14. Available at: https://www.ft.lk/news/Poetic-injustice-Another-writer-languishes-in-prison-under-PTA/56-710172?fbclid=IwAR1779G53dn9hAvPMOxTT7IkwwTnUWcnoqzmlhaFudgOU2v9ImG6Mz1Njts